RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1714

# புறநானூற்றில் பாணர் வாழ்வியல்

**இ. மரிய செல்வி [அ, *]**

[அ] தமிழ்த்துறை, ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி- 626123, தமிழ்நாடு, இந்தியா

# The Life of the Panar in the Purananooru

**I. Mariyaselvi [a, *]**

[a] Department of Tamil, Sri Kaliswari College (Autonomous), Sivakasi-626123, Tamil Nadu, India

* Corresponding Author: mariyaselvimphil1990@gmail.com

Received: 10-04-2022
Revised: 18-10-2022
Accepted: 07-11-2022
Published: 17-12-2022

Check for updates

**ABSTRACT**

There were various artists during the Sangam literature period. Among them, the performers, the Panars, occupy a particular place. The Panars are of various kinds based on the musical instrument they play and according to the context in which they sing. This study is to study their lives and habits. This study examines the condition in which the Panars who lived in the clutches of poverty did not enjoy the rewards they had received themselves, but by giving them to people like him and comforting them. The Sangam age, which is revered as the Veera Yuga (Heroic Age), and the literature created during that period, are the cultural symbols of the Tamils and the historical treasures. The Sangam literature consists of Koothu artists including Panar, Kodiyar, Vayiriyar, Koothar, Thunangaiyar, Viraliyar, Koothiyar, Padini, Aadumakal, Paadumakal, Pattisai Kalaignars, and the artists who play musical instruments and dancers. Among the Sangam literary performers, the Panars are projected by the majority of the poets. The word Panar has been widely studied in Sangam literature. It comes in twenty-six places in the Purananooru alone. This article examines the life of the Panars in the Purananooru.

**Keywords:** Purananooru, Panar, Sangam Literature, Panar Life style.

## முன்னுரை

'பண்' என்னும் சொல்லை முதனிலையாகப் பெற்று முதல் நீண்டது பாண் என்பதாகும். பாண் என்பது 'அர்' என்னும் பலர்பால் ஈறுபெற்றுப் பாணர் என்றாயிற்று. பாணன் என்பதற்குத் தமிழ்ப்பேரகராதி, "பாடவல்ல ஒரு சாதி" என்று குறிப்பிடுகின்றது. பாணி என்பதற்கு "இசைப்பாட்டு, இசையுறுப்பாகிய தாளம், அழகு, கூத்து" என்று தமிழ்ப்பேரகராதி பொருள் தருகின்றது (Thamilaga Peragarathi, 1956).

சங்க காலத்தில் பாணர்களைப் பெருநில வேந்தர்களும் குறுநிலத் தலைவர்களும் போற்றி ஆதரித்துள்ளனர். பாணர்களுள் பெரும்பாணர், சிறுபாணர் என்ற இருபிரிவினர் இருந்தனர். பேரியாழ் கொண்டு மிக இசையறிவு பெற்றுப் பாடியோர் பெரும்பாணர் என்றும், சீறியாழ் கொண்டு இசைக்கும் பாணர் சிறுபாணர் என்றும் அழைக்கப்பட்டனர் (Sridevi, 2022). யாழிற்கு கைவழி என்ற பெயரும் கேள்வி என்ற பெயரும் குறிப்பிடப்படுகிறது. இதன்வழி கைவழிப்பாணர் என்றும் அழைக்கப்பட்டனர். பண்ணிசைத்துப் பாடியதால் இசைப்பாணர் என்றும் யாழ்மீட்டி இசையை உருவாக்கியதால் யாழ்ப்பாணர் என்றும் அழைக்கப்பட்டனர். சங்ககால இசைக்கலைஞர்களில் பாணர் சமூகத்தில் சிறப்பிடம் பெற்று வாழ்ந்தனர் (Girivasan, 2022). தொல்குடிகளில் ஒருவராக விளங்கினர். இதனை,

"துடியன் பாணன் பறையன் கடம்பனென்று

இந்நான் கல்லது குடியுமில்லை"

என்ற புறநானூற்றுப் பாடலடிகள் புலப்படுத்துகின்றன (Avvai Duraisamy pillai, 2010). இந்நான்கு குடியுமின்றிச் சமூகம் இயங்காது என்பதையும் இவ்வடிகள் உணர்த்துகின்றன.

## பாணர் வகை

பாணர்கள் இசைக்கும் கருவியின் பெயரால் (அல்லது) பண்ணொடு பாடுவதால் நான்கு வகைப்படுவர். அவர்கள்

1. சீறியாழ்ப்பாணர் - சிறுபாணர்
2. பேரியாழ்ப்பாணர் - பெரும்பாணர்
3. மண்டையாழ்ப்பாணர் - மண்டைப்பாணர்
4. இசைப்பாணர் - பனுவல் பாடுநர்

எனபோர் ஆவர். இவ்வகைப்பாட்டோடு இவர்கள் பாடும் சூழலால் 'ஏர்க்களப்பாணர்' என்றும் 'போர்க்களப் பாணர்' என்றும் இருவகையாகக் காணலாம்.

## பாணர்களின் கலைத்தொழில்

பாணர்கள் பெரும்பாலும் பெருவேந்தர்களையும் குறுநிலமன்னர்களையும் சார்ந்தே வாழ்ந்துள்ளனர். வேந்தர்களின் வெற்றி, புகழ், ஈகை, நாட்டின்வளம் என அனைத்துத் தளங்களிலும் அவர்களின் புகழ்பாடும் ஊடகமாகவே கலைத்தொழில் புரிந்துள்ளனர். அதன்மூலம் பெற்ற பொருட்களைக் கொண்டு வாழ்க்கையைத் தம் சுற்றத்தோடு வறுமை நீங்க வாழ்ந்துள்ளனர்.

"பாணர்களில் ஒருசிலர் தூதுவராக, ஒற்றராக, ஏவல்பணி செய்வோராக அரண்மனைகளில் வாய்ப்புப் பெற்று அமர்ந்துள்ளனர். அவ்வழியே பாடல் பாடும் வாய்மொழிப் பாடகரான பாணர்களுள் ஒருசிலர் கல்வி அறிவு பெற வாய்ப்புப் பெற்றுப் புலவர் மரபினராக உருப்பெற்றுள்ளனர். வடமொழி மரபு வழிவந்த புலவர் போலப் பாணர் மரபுவழி வந்த மரபிசைப் புலவராகச் சிலர் உருவாகியுள்ளனர்" (Gandhi dhasan, 2011).

இதன் மூலம் பாணர்கள் தம் அறிவுத்திறனால் கலைத்தொழில் மட்டுமின்றி தூதுவர், ஒற்றர் உள்ளிட்ட பிற தொழிலையும் புரிந்து உள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

பாணர்கள் கருவியிசையிலும் குரலிசையிலும் வல்லவர்களாகத் திகழ்ந்துள்ளனர் என்பதை,

"இழை பெற்ற பாடினிக்குக்

குரல் புணர் சீர்க்கொளை வல்மாண் மகனும்மே"

என்ற புறநானூற்றுப் பாடல் புலப்படுத்துகிறது (Avvai Duraisamy pillai, 2010). மேலும் பாணர் யாழுடன் ஆகுளி, பதலை, முழவு முதலிய வேறுவகைப் பறை வாத்தியங்களையும் வைத்திருந்தனர். இவர்களின் நிகழ்வு வழங்குதல் ஆடலையும் பாடலையும் உள்ளடக்கி இருந்தது என்பதை,

"சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி,

விரையொலி கூந்தல் விறலியர் பின்வர,

ஆடினர் பாடினிர் செலினே"

என்ற பாடல் விளக்குகின்றது (Avvai Duraisamy pillai, 2010). மேலும், பாணர் குழுவில் விறலி ஆடியதை இப்பாடல் குறிப்பிடுகின்றது.

## பாண்கடன்

பாண்மரபினரான கலைஞர் குழுவைப் புரப்பதும் காப்பதும் மன்னர்களின் கடமைகளில் ஒன்றாகக் கருதப்பட்டது. சங்ககால மக்களும் அவ்வாறே எண்ணினர். இதுவே பாண்கடன் எனப்பட்டது. சங்ககாலக் குறுநில மன்னன் இருங்கோவேள் பாணர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் சரிவர செய்தான் என்பதை,

"ஆண்கடன் உடைமையின் பாண்கடன் ஆற்றிய"

என்ற புறநானூற்றுப் பாடலடி மூலம் அறியலாம் (Avvai Duraisamy pillai, 2010). பாணருக்கு உதவுவது கடமையாகக் கருதி அவர்களைச் சார்ந்தவன் இளஞ்சேட்சென்னி என்னும் மன்னனாவான். இதனை,

"பாண்கடன் இறுக்கும் வள்ளியோய்"

என்ற புறநானூற்றுப் பாடலடி வழியாகவும் அறியலாம் (Avvai Duraisamy pillai, 2010).

## பாணர்களின் வாழ்க்கை முறை-(அலைகுடி வாழ்க்கை)

பாணர்கள் ஓரிடத்தில் நிலைத்து வாழாது நாடு முழுவதும் மன்னர்களையும் வள்ளல்களையும் மக்களையும் நாடித் தங்கள் கலைகளை நிகழ்த்தி அவற்றின் மூலம் பெற்ற வருவாயைக் கொண்டு வாழ்க்கை நடத்தினர். பாணர்கள் கூட்டம் கூட்டமாக ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கொடை வேண்டி அலைந்து திரிவோராவர். இவ்வாறு அலையும் பாணர்கள் பழுமரம் தேடி அலையும் பறவைகளோடு அடிக்கடி ஒப்பிடப் பெறுகின்றனர்.

"பழுமரம் உள்ளிய பறவை போல"

உண்மையில் பசியும் பட்டினியும் அவர்களோடு உடன் இருந்தன (Avvai Duraisamy pillai, 2010). கோப்பெருஞ்சோழன் பாண் குடுமபத்தின் பசிப் பகைவனை அழிப்பவனாக இருக்கின்றான் என்பதை

"யாணர் நல்நாட் டுள்ளும் பாணர்

பைதல் சுற்றத்தப் பசிப்பகை யாகி"

என்ற அடிகள் உணர்த்துகின்றன (Avvai Duraisamy pillai, 2010). பாணர்களின் வாழ்க்கைமுறை நாடோடித் தன்மையாய் இருப்பினும் சமூகத்தையும் அரசனையும் சார்ந்த சார்பு வாழ்க்கை முறையாகவே காணப்படுகிறது.

## பாணரும் சுற்றமும்

பாணர்களின் வாழ்க்கை முறையில் சுற்றத்தார் பெரும்பங்கு வகிக்கின்றனர் பாணரைக் குறிப்பிடும் பொழுதெல்லாம் கடும்பு, ஒக்கல், சுற்றம் எனக் குறிக்கப் பெறுகின்றனர். பாணர் தம் வாழ்வில் பெற்ற செல்வத்தைச் சுற்றமொடு பகிர்ந்து வாழும் பண்பு பெற்றவராக இருந்ததை அறியமுடிகிறது.

"இரும்பேர் ஒக்கல் பெரும்புலம்பு அகற்ற"

மேலும் "கட்கேள்விக் கவை நாவின்

நிறன் உற்ற வராஅப் போலம்

வறன் ஒரீஇ வழங்கு வாய்ப்

விடுமதி அத்தை கடுமான் தோன்றல்"

என்ற பாடல்கள் வழி தமக்கு வேண்டுவன தருபவற்றைப் பிறர்க்குத் தாம் வழங்கி மகிழ்வேம் என்பதன் மூலம் அவர்களின் சுற்றம் சூழ வாழும் நற்குணத்தை அறியலாம் (Avvai Duraisamy pillai, 2010).

## பாணர்களின் பழக்க வழக்கங்கள்

பாணர்கள் இறைச்சி, கள் உண்ணும் பழக்கத்தினராக இருந்துள்ளனர். இதனை,

"பாணர் மண்டை நிறையப் பெய்ம்மார்

வாக்க உக்க தேக்கள் தேறல்"

என்ற பாடல் மூலம் அறியமுடிகிறது (Avvai Duraisamy pillai, 2010). பாணர்கள் செல்வத்தைச் சேர்த்து வைக்கும் வழக்கம் உடையவராகக் காணப்படவில்லை. நிலைத்த சமூகமாய் அல்லாமல் நாடோடிகளாய் நிலைத்த சமூசத்தினரை நாடி அவர்களை அண்டி வாழும் நாடோடிகளாகக் காணப்படுகின்றனர்.

"யானும், ஏழ்மணி யங்கேள், அணிஉத்திக்,

கட்கேள்விக், கவை நாவின்

நிறன்உற்ற, அராஅப் போலும்

வறன்ஒரீ, வழங்கு வாய்ப்ப,

விடுமதி அத்தை, கடுமான் தோன்றல்!"

என்ற பாடலில் கோவூர்கிழார் எம்பசி ஒழிந்து பிறர்க்கும் வழங்கி மகிழுமாறு வேண்டிய பரிசில்கள் தந்து எம்மை அனுப்புவாயாக என்று பாடியுள்ளார் (Avvai Duraisamy pillai, 2010). கலைச் செல்வத்தைப் போற்றிய பாணர்கள் பொருட் செல்வத்தைப் போற்றிப் பாதுகாக்கவில்லை என்பதை அவர்களது வாழ்க்கை நமக்குப் புலப்படுத்துகிறது.

## பாணர் மரபு

சங்ககால மக்கள் ஆண், பெண் வேறுபாடின்றித் தலையில் பூச்சூடும் மரபினை உடையவர்கள். அவ்வகையில் பாணர்களும் தலையில் பூச்சூடும் மரபினை உடையவர்களாகக் காணப்படுகின்றனர். பாணர் தலைவன் ஒருவன் இறந்ததினால் பூச்சூடவில்லை என்ற செய்தியை,

"பாணர் சென்னியும் வண்டு சென்று ஊதா"

என்ற பாடலடியும்

"பாணர் சூடான் பாடினி அணியாள்"

என்ற பாடலடியும் புலப்படுத்துகின்றன (Avvai Duraisamy pillai, 2010). பாணர் குழுவினர் இன்னொரு பாணர் குழுவினரை ஆற்றுப்படுத்துவது மரபாகும். இதனையே ஆற்றுப்படை இலக்கியங்கள் உணர்த்துகின்றன.

பாணர் அகவாழ்க்கையில் தூது செல்லும் மரபுடையவர்களாகக் காணப்படுகிறார்.

"தொன்நெறி மரபின் கற்பிற்குரியர்"

தலைவின் ஊடல் தீர்க்கும் வாயில்களாகவும் செயல்பட்ட மரபினை,

"நிலம்பெயர்ந் துரைத்தல் வரைநிலை யுரைத்தல்

கூத்தர்க்கும் பாணர்க்கும் யாத்தவை உரிய"

எனும் தொல்காப்பிய நூற்பாவழி அறியமுடிகிறது (Tamizhannal, 2009).

## பாணரின் வறுமை

பாணரின் வாழ்க்கை வறுமை நிலைப்பட்டதாகவே பெரும்பான்மைப் பாடல்களில் காணப்படுகின்றது. அவர்கள் உணவு, உறையுள் இன்றி உடுத்த நல்லாடைகள் இன்றிச் சுற்றத்தாரோடு நாடோடிகளாய்த் திரிந்த வாழ்க்கையைப் புறநானூற்றுப் பாடல்கள் வழி அறியலாம்.

“கையது கடன் நிறை யாழே! மெய்யது

புரவலர் இன்மையின் பசியேஇ அரையது

வேற்றுஇழை நுழைந்து வேர்நனை சிதாஅர்

ஓம்பி உடுத்த உயவல் பாண!

பூட்கை இல்லோன் யாக்கை போலப்

பெரும்புல் லென்ற இரும்பேர் ஒக்கலை”

என்ற பாடலடிகள் கையிலே எப்பொழுதும் இலக்கண முறைமை நிரம்பிய யாழை வைத்திருப்பதைக் கொண்ட பாணன் நைந்து தைத்த வியர்வையால் நனைந்தபழைய கந்தையாடை அணிந்து எப்பொழுதும் தன் சுற்றத்தோடும், பொலிவற்ற உடலோடும் பசியோடும் அலையும் பாணனே என்னும் பொருள்பட பாடப் பெற்றுள்ளது (Avvai Duraisamy pillai, 2010). இப்பாடல் பாணனின் வறுமை நிலையைத் தெளிவாக உணர்த்துகின்றது. மேலும்,

“உடும்பு உரித்து அன்ன என்புஎழு மருங்கின்

கடும்பின கடும்பசி களையுநர்க் காணாது”

என்ற பாடலில் பாணரின் கடும்பசியினைப் போக்கக்கூடிய வள்ளலைக் காணாது வறுமையின் கொடுமையினால் எலும்பும் தோலுமாக இருந்ததை ‘உடும்பு’ என்னும் விலங்கின் தோலினை உரித்தபின் காட்சி தருவதைப் போலக் காணப் பெற்றதைப் புலப்படுத்தக் காணலாம் (Avvai Duraisamy pillai, 2010).

உடைகிழிந்தும், நைந்தும், பழமையுற்று, இழைகள் எல்லாம் தெரியும்படி கிழிந்து போன ஆடையை அணிந்திருந்தனர் என்றும், நெய்த இழைகளைக் காட்டிலும் கிழிந்த இடங்களைத் தைத்த பிறநூல் இழைகளே மிகுந்து இருந்தன என்பதை,

“தொன்றுபடு துளையொடு பருவிழை போகி

நைந்து கரை பறைந்த என்உடையும் நோக்கி”

என்ற பாடலடிகள் வழி அறியலாம் (Avvai Duraisamy pillai, 2010).

## பசிதீர்த்தமை

பாணர்கள் தங்கள் சுற்றத்துடன் தாம் தேடி வந்த கொடையாளரிடம் அடைந்தபின் அத்தலைவன் பாணர்களுக்கு முதற்கண் விருந்து வைத்து அவர்களது பசியினை ஆற்றியுள்ளான் என்பதை,

“படுமடைக் கொண்ட குறுந்தாள் உடும்பின்

விழுக்கு நிணம் பெய்த தயிர்க்கண் விதவை

யாணர் நல்லவை பாணரொடு ஒராங்கு

வருவிருந்து அயரும்”

என்ற பாடலடிகள் குறிப்பிடுகின்றன (Avvai Duraisamy pillai, 2010). மேலும் பாணர்களுக்கு ஊன், உணவு, தயிர், பழங்கள், தீயில் வறுத்த தசைத் துண்டுகள், கள், அரிசியில் நெய் சேர்த்து செய்யப்பட்ட உணவு உள்ளிட்டவற்றை வழங்கினான் என்பதை,

“வெள்ளத் திடும்பால் உள்ளுறை தொடரியோடு
களவுப் புளியன்ன விளைகள்
வாடூன் கொழுங்குறை
கொய்குரல் அரிசியொடு நெய்பெய்து அட்டுத்
துடுப்பொடு சிவனிய களிக்கொள் வெண்சோறு
உண்டு இனி திருந்த பின்றை”

என்ற பாடலடிகள் புலப்படுத்துகின்றன (Avvai Duraisamy pillai, 2010). மேலும் அவர்களின் பசித்துன்பத்தைப் போக்க ஆட்டிறைச்சியும் கள்ளும் அவர்கள் பசிதீர்க்கத் தரப்பட்டன என்பதை,

“அரவு வெகுண்டன்ன தேறலொடு சூடுதருபு
நிரயத்தன்ன என் வறன்களைந் தன்றே”

என்ற பாடலடிகள் மூலம் அறியலாம் (Avvai Duraisamy pillai, 2010).

## முடிவுரை

பாணர்கள் பண்ணோடு பாடுவதிலும் இசைக்கருவி இசைப்பதிலும் திறன் மிகப்பெற்றவர்களாகக் காணப்படுகின்றனர். புலவர் பரம்பரையின் தோற்றுவாயாகப் பாணர்களே காணப்படுக்கின்றனர். பாணர்கள் செல்வத்தைச் சேமிக்கும் பழக்கமற்றவர்களாய் ஒரு நாடோடிக் குழுவாக (அலைகுடியாக) வாழ்ந்துள்ளனர் என்பதை அறியமுடிகிறது. சங்க இலக்கியப் பாடல்கள் குறிப்பாகப் புறநானூற்றுப் பாடல்கள் பாணர்களின் வறுமையைப் படம்பிடித்துக் காட்டுகின்றன. பாணர்கள் அரண்மனைக்குச் சென்று வள்ளல் பெருமக்களிடத்துப் பரிசில் பெறுவதும் பெற்றதைத் தம்போன்று வறுமையில் இருப்போர்க்கு அளிப்பதும் அவர்களை ஆற்றுப்படுத்துவதும் பாணர்களின் இயல்பாக இருந்துள்ளமையை உணரலாம்.

## References

Avvai Duraisamy pillai, S. (2010) Purananooru Moolam Uraiyum, Poompuhar Pathippagam, Chennai, India.

Gandhi dhasan, K. (2011) Sanka Ilakkiyattil Panar Valviyal, International Institute of Tamil Studies, Chennai, India.

Girivasan, K. (2022) Panar tradition and Pulavar tradition, International Research Journal of Tamil, 4(SPL 2), 34-43. https://doi.org/10.34256/irjt22s26

Sridevi, P. (2022) Biographical and Cultural Evolution of Paanar, International Research Journal of Tamil, 4(SPL 1), 41-45. https://doi.org/10.34256/irjt22s16

Tamizhannal, (2009) Tholkkapiyam, Koviloor Madalayam, Koviloor, India.

Thamilaga Peragarathi, (1956) Excelsior Powerpress, Madurai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License